**<u>சுருக்கம்</u>**

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோரின் கோரிக்கைகள் – பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4) துறை**

அரசாணை (நிலை) எண். 113 நாள்: 22.08.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039
ஆவணி திங்கள் 6–ம் நாள்

படிக்கப்பட்டது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.08.2008 அன்று ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட புதிய சலுகைகள் பற்றிய செய்தி குறிப்பு

------

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 19.8.2008 அன்று சந்தித்து, தங்களது கோரிக்கைகளை அளித்தார்கள். அப்போது ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் வெளியிடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்பொழுது பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பினரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதால் பார்வையற்றோருக்கு வழங்கப்படுவது போன்றே அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்க அரசு ஆணையிடுகிறது.

3. மதிப்பீட்டுடன் கூடிய உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறையின் அ.சா.எண்.2686/FS/P/08 நாள் 22.08.2008.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை 6.
மாநிலக் கணக்காயர், சென்னை 9/18/35
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 35
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மூலமாக)

<u>நகல்</u>

அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
நிதித் (சந) துறை, சென்னை 9/நிதி (வழியாக) துறை, சென்னை 9
சமூக நலத் (சந2) துறை, சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்